மாலை முரசு

பக்கங்கள் 14+3

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2055 | ஐப்பசி 10 ஞாயிற்றுக்கிழமை 27.10.2024 | அதிர்வு 87

## பருத்தித்துறைக் கடற்பரப்பில் 12 இந்திய மீனவர்கள் கைது!

(எஸ்.நிதர்ஷன்)

இலங்கைக் கடற்பரப்புக்குள் எல்லை தாண்டி மீன்பிடியில் ஈடுபட்ட இந்திய மீனவர்கள் 12 பேர் நேற்று சனிக்கிழமை கடற்படையினரால்

02 ▶

‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்

### வடக்கு, கிழக்கில் இருந்து ஆளுமையுள்ளவர்கள் நாடாளுமன்றம் வர வேண்டும்

# அநுர அரசுடன் பேசி நிரந்தரமான தீர்வை பெற்றுத் தருவோம்!



CLICK HERE VIDEO



## தமிழ் மக்களின் ஆணையைக் கோருகின்றார் மனோ

“ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான அரசுடன் பேச்சு நடத்தி நாட்டில் தீராத இனப்பிரச்சினைக்கு நிரந்தரமான தீர்வைப் பெற்றுத் தருவோம். அதற்கான ஆணையைத் தமிழ் மக்கள், தமிழ் முற்போக்குக் கூட்டணிக்கும் தமிழ்த் தேசியக் கட்சிகளுக்கும் வழங்க வேண்டும்.”

- இவ்வாறு தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் தெரிவித்தார்.

‘TamilOne’ தொலைக் காட்சிக்கு வழங்கிய நேர்காணலின்போதே மனோ கணேசன் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

“தமிழ்த் தேசியத்தைப் பிரதிநிதித்துவப் படுத்தக் கூடிய ஆளுமையுள்ளவர்கள் வடக்கு, கிழக்கில் இருந்து தெரிவு செய்யப்பட்டு

02 ▶

# தமிழ்த் தேசியத் தளத்தில் இயங்குகின்ற சகல கட்சிகளையும் ஒருங்கிணைப்பேன்

## தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் சிறீதரன் சபதம்

(எஸ்.நிதர்ஷன்)

“ஈழத்தமிழர்களின் இறைமை மீட்புக்கான அரசியல் போரில், ஏகோபித்த தலைமைத்துவத்தின் கீழ் தமிழ்த் தேசியக் கட்சிகள் அனைத்தையும் ஒருங்கிணைத்துப் பயணிப்பதற்கான எத்தனங்களை மேற்கொள்வேன்.”



உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்-Bonding Tamils Globally

# அநுரகுமாரவின் அணுகுமுறையில் நல்லதொரு மாற்றம் தெரிகின்றது!

## பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும் என்கிறார் டக்ளஸ்






(கி.வசந்தன்)

"ஜனாதிபதி அநுரவின் அணுகுமுறையிலும் செயற்பாட்டிலும் நல்லதொரு மாற்றம் தெரிகின்றது. எனினும், அதனைப் பொறுத்திருந்துதான் நாங்கள் பார்க்கவேண்டும்."

– இவ்வாறு முன்னாள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

வவுனியாவுக்கு இன்று விஜயம் செய்த ஈ.பி.டி.பியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா, காத்தார்சின்னக் குளம் பகுதியில் கட்சியின் தேர்தல் அலுவலகம் ஒன்றைத் திறந்து வைத்தார். அதன் பின்னர் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்தப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில்,

"தேசிய நல்லிணக்கம் ஊடாகவே எமது மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்க முடியும். புதிய நாடாளுமன்றத்தில் கூடிய ஆசனங்களைப் பெறுவதன் மூலம் ஆட்சி அமைப்பவர்களுடன் நாங்களும் பங்கு கொள்வதன் ஊடாக மத்தியில் கூட்டாட்சி மாநிலத்தில் சுயாட்சி என்ற எமது அரசியல் இலக்கை அடைவதற்காக அந்தத் திசையை நோக்கிப் பயணிக்கலாம் என்ற வகையில் பத்து மாவட்டங்களில் இம்முறை போட்டியிடுகின்றோம்.

இதனூடாக நான்கு அல்லது ஐந்து ஆசனங்களைப் பெறுவது எமது இலக்காக உள்ளது. இதுவரை நான் எட்டு ஜனாதிபதிகளைச் சந்தித்துள்ளேன். ஆனால், ஜனாதிபதி அநுர என்னைவிட வயதில் இளைமையானவர். அவரது அணுகுமுறையிலும் செயற்பாட்டிலும் நல்லதொரு மாற்றம் தெரிகின்றது. எனினும், அதனைப் பொறுத்திருந்துதான் நாங்கள் பார்க்கவேண்டும்.

நாம் வடக்கு – கிழக்கு தமிழ் பேசும் மக்களின் அரசியல் உரிமை பிரச்சினையைப் பிரதானமாக முன்வைத்துள்ளோம்.

இந்தத் தேர்தலில் எமது கட்சி அதிக ஆசனங்களைப் பெறுவதற்கான வாழ்த்துக்களையும் அவர் தெரிவித்திருந்தார். சில வேளை இந்தச் சந்திப்பு பலருக்குப் புளியைக் கரைத்திருக்கலாம். நாங்கள் இரு தரப்புமே ஆயுதப் போராட்டத்தின் பின்னர் நாடாளுமன்றம் சென்றவர்கள். அந்தவகையில் ஒரு புரிந்துணர்வு இரு தரப்புக்கும் உள்ளது. அவர்களது ஆட்சியில் கலந்துகொள்ளப் போகின்றோமா என்ற விடயத்தைத் தேர்தலின் பின்னரே தீர்மானிக்க முடியும்.

இதேவேளை, எல்பிட்டியவில் தேசிய மக்கள் சக்தி 15 ஆசனங்களும், எதிர்த் தரப்புக்கள் 15 ஆசனங்களையும் பெற்றுள்ளது. தேசிய மக்கள் சக்தியினர் நாடாளுமன்றத்திலும் பெரும்பான்மை எடுப்பதாகச் சொல்கின்றார்கள். அதனைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும். ஜனாதிபதித் தேர்தலிலும் கணிப்புகள் எல்லாம் பிழைத்து விட்டது. எனவே, பொறுத்திருப்போம்." – என்றார்.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்





**தமிழ்த் தேசிய...**

– இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் யாழ்ப்பாணம் – கிளிநொச்சி தேர்தல் மாவட்ட முதன்மை வேட்பாளரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான சிவஞானம் சிறீதரன் தெரிவித்தார்.

நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலை முன்னிட்டு கிளிநொச்சி – செல்வா நகர் வட்டாரத்தில், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் செயற்பாட்டாளர்களைச் சந்தித்துக் கலந்துரையாடியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

"தமிழ்த் தேசியக் கட்சிகளுக்கு உள்ளும் புறமுமாய் ஏற்பட்டுள்ள பிளவுகள், எமது மக்களிடையே பலத்த அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது. அதனால் எமது மக்கள் அரசியல் வெறுமைக்குள் தள்ளப்பட்டுள்ளார்கள். இந்த நிலை மாற வேண்டுமானால், தமிழ்த் தேசியத் தளத்தில் இயங்கும் கட்சிகளும், அதன் தலைமைகளும் ஓரணியில் இணைய வேண்டிய காலத் தேவை எழுந்துள்ளது.

உட்கட்சி முரண்நிலைகளைத் தாண்டி இது சாத்தியமா? என்ற கேள்வி இருந்தாலும், இனத்தின் இருப்புக்காக அதனைச் சாத்தியமாக்க வேண்டிய காலக் கடமை எமக்கு தரப்பட்டுள்ளதை உணர்ந்து, கொள்கை ரீதியான உடன்பாடுகளின் அடிப்படையில் முறைமைப்படுத்தப்பட்ட இணக்க நிலையை உருவாக்கவும், அதன்வழி ஈழத் தமிழர்களின் அரசியல் வெளியில் காத்திரமான தலைமைத்துவத்தை உருவாக்கவும் தொடர்ந்தும் உழைப்பேன்." – என்றார்.

**பருத்தித்துறை...**

கைது செய்யப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம் மாவட்டம், பருத்தித்துறையை அண்மித்த கடற்பரப்பில் மீன்பிடியில் ஈடுபட்ட 12 இந்திய மீனவர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டு காங்கேசன்துறை கடற்படை முகாமுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளனர்.

அவர்கள் மீன்பிடிக்கப் பயன்படுத்திய ட்ரோலர் படகும் காங்கேசன்துறை கடற்படை முகாமுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது.

கைதான 12 மீனவர்களும் மயிலிட்டியில் வைத்து யாழ். மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத் திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டு பருத்தித்துறை நீதிமன்றில் முற்படுத்தப்படவுள்ளனர்.

**அநுர அரசுடன் பேசி...**

நாடாளுமன்றத்துக்கு வர வேண்டும். வடக்கு, கிழக்குக்கு வெளியே வாழும் தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் நாங்களும் நிச்சயமாக நாடாளுமன்றம்செல்வோம். நாங்கள் அனைவரும் கரம் கோர்த்துக்கொண்டு சிநேகபூர்வமான முறையில் அநுர அரசுடன் பேச்சு நடத்தி நாட்டில் தீராத இனப்பிரச்சினைக்கு நிரந்தரமான தீர்வைப் பெற்றுத் தருவோம்." – என்றார்.

முழுமையான நேர்காணல் காணொளி, இந்தச் செய்தியுடன் இணைக்கப்பட்டுள்ளது. அதனை வாசகர்கள் பார்வையிட முடியும்.


பாராளுமன்ற தேர்தல் 2024
யாழ் கிளிநொச்சி தேர்தல் மாவட்டம்
சிறீதரன்
சுமந்திரன்
சுகிர்தன்
சயந்தன்
கிருஸ்ணவேணி
பிரகாஷ்
ஆர்னோல்ட்
சுரேகா
இளங்கோவன்
அடையாளம் மாறாத
அரசியல் மாற்றம்
இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி
Ilankai Tamil Arasu Kadchi

# நாடாளுமன்றத் தேர்தல் தொடர்பாக யாழ்ப்பாணத்தில் கலந்துரையாடல்











(எஸ்.நிதர்ஷன், பிரபாகரன் டிலக்சன்)

நாடாளுமன்றத் தேர்தல் தொடர்பாக யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்ட அரசியல் கட்சிகளின் அதிகாரமளிக்கப்பட்ட முகவர்கள், சுயேச்சைக் குழுத் தலைவர்களுடனான கலந்துரையாடல் யாழ். மாவட்ட அரச அதிபரும் தெரிவத்தாட்சி அலுவலருமான மருதலிங்கம் பிரதீபனின் தலைமையில் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் கருத்துத் தெரிவித்த தெரிவத்தாட்சி அலுவலர், "எதிர்வரும் நவம்பர் மாதம் 14 ஆம் திகதி நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் இம்முறை யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்தில் 23 அரசியல் கட்சிகளும், 21 சுயேச்சைக் குழுக்களும் போட்டியிடுகின்றன. 6 நாடாளுமன்ற உறுப்பினர்களைத் தேர்வு செய்வதற்காக 396 வேட்பாளர்கள் போட்டியிடுகிறார்கள். ஆதலால் வேட்பாளர்கள் சட்டங்கள் மற்றும் சுற்றுநிருபத்துக்கு அமைய ஜனநாயக ரீதியில் பிரசார நடவடிக்கைகளை எதுவிதமான முரண்பாடுகளுமின்றி ஆரோக்கியமாக மேற்கொள்வதனை எதிர்பார்க்கின்றோம்.

மேலும், யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 511 வாக்களிப்பு நிலையங்களுக்கும், யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் அமைக்கப்படவுள்ள 48 வாக்கெண்ணும் நிலையங்களுக்கும், 17 அஞ்சல் வாக்கெண்ணும் நிலையங்களுக்கும் மற்றும் பெறுபேறு தயாரித்து வெளியிடும் நிலையத்துக்கும் வேட்பாளர்களின் முகவர்களைச் சரியான பொறிமுறையூடாக சட்டத்தின் மூலம் நியமித்து நீதியாகவும், சுதந்திரமாகவும் தேர்தல் நடைபெறுவதனை உறுதிப்படுத்துவதற்கு அனைவரும் ஒருங்கிணைந்து செயற்பட்டச் சிறப்பான ஒத்துழைப்பை நல்க வேண்டும்.

இம்முறை யாழ். மாவட்ட செயலகத்தில் இயங்கும் முறைப்பாட்டுப் பிரிவுக்கு மேலதிகமாக சாவகச்சேரி, சண்டிலிப்பாய் மற்றும் பருத்தித்துறை ஆகிய பிரதேச செயலகப் பிரிவுகளிலும் முறைப்பாட்டுப் பிரிவுகள் அமைக்கப்படவுள்ளன." - என்றார்.

இந்தக் கலந்துரையாடலில் தேர்தல்கள் உதவி ஆணையாளர் இ.கி.அமல்ராஜ் தெளிவூட்டல்களை முன்வைத்தார்.

மேற்படி கலந்துரையாடலில் அரசியல் கட்சிகளின் அதிகாரமளிக்கப்பட்ட முகவர்கள், சுயேச்சைக் குழுத் தலைவர்கள் பங்குபற்றினார்கள்.

# யாழில் தனிமையில் வசித்த வயோதிபர் சடலமாக மீட்பு!

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணத்தில் தன்மையில் வசித்து வந்த வயோதிபர் அவரது வீட்டில் இருந்து சடலமாக மீடகப்பட்டுள்ளார்.

திருநெல்வேலி, கேணியடி பகுதியை சேர்ந்த சின்னத்தம்பி சிறிராகுலன் (வயது 79) என்பவரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

நல்லூர் பிரதேச செயலக உத்தியோகஸ்தர்கள், பொதுச் சுகாதாரப் பரிசோதகர் ஆகியோர் நேற்று சனிக்கிழமை டெங்கு ஒழிப்பு கள தரிசிப்புகளை மேற்கொண்டனர்.



அதன்போது மேற்படி வயோதிபரின் வீட்டுக்குச் சென்றபோது வீட்டினுள் சைக்கிள் மீது விழுந்த நிலையில் சடலமாகக் காணப்பட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர்கள் கோப்பாய் பொலிஸாருக்குத் தகவல் வழங்கியதை அடுத்துசம்பவஇடத்துக்குவிரைந்தபொலிஸார் சடலத்தை மீட்டு யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைத்தனர்.

உடற்கூற்றுப் பரிசோதனையின்போது மாரடைப்பு காரணமாகவே உயிரிழப்பு ஏற்பட்டுள்ளது என்று தெரியவந்துள்ளது.



# இந்தோனேஷிய தூதுவருடன் சர்வமதத் தலைவர்கள் சந்திப்பு

(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

ஸ்ரீலங்கா தேசிய சர்வ மத குரு ஒன்றியத்தின் தலைவர் சாஸ்த்ரயதி கலாநிதி கலகம தம்மரன்ஸி நாயக்க தேரர் தலைமையில் சர்வ மதத் தலைவர்களின் பங்களிப்புடன் இந்தோனேஷிய தூதுவர் தேவி குஸ்டினா டோபின்ங்குடனான விஷேட கலந்துரையாடல் ஒன்று இலங்கைக்கான இந்தோனேஷிய தூதரகத்தில் அண்மையில் நடைபெற்றது.

இந்தக் கலந்துறையாடலில் சாஸ்த்ரயதி கலாநிதி கலகம தம்மரன்ஸி நாயக தேரர், சிவஸ்ரீ கலாநிதி ராமச்சந்திர பாபுசர்மா குருக்கள், அல்-ஹாஜ் அஷ்-ஸெய்யத் கலாநிதி ஹஸன் மௌலானா அல்-காதிரி, கலாநிதி நிஷான் சம்பத் குரே பாதிரியார் உட்பட பௌத்த, இந்து, இஸ்லாம், கிறிஸ்தவ மதங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தி சகல மதத் தலைவர்களும் கலந்து கொண்டனர்.

இக்கலந்துரையாடலின் போது இலங்கை மற்றும் இந்தோனேஷியா இருநாடுகளுக்கிடையில் மதங்களுக்கு இடையே மத நல்லிணக்கம் மற்றும் சகவாழ்வை பேணுவதில், சர்வமத அமைப்பினரின் பங்கு முக்கியம் என்பதை பற்றியும், அதன் விரிவான திட்டங்கள் பற்றியும் விஷேடமாக கலந்துரையாடப்பட்டன.



# சிலிண்டர் சின்னத்தில் போட்டியிடும் ஜெமீல்!



(எம். எப். றிபாஸ்.)

திகாமடுல்ல மாவட்டத்தில் புதிய ஜனநாயக முன்னணி கட்சியின் சிலிண்டர் சின்னத்தில் போட்டியிடும் முன்னாள் மாகாண சபை உறுப்பினரும், வேட்பாளருமான ஏ.எம்.ஜெமீலை ஆதரித்து இறக்காமம்,வரிப்பத்தான்சேனை ஆகிய பிரதேசங்களில் மக்கள் சந்திப்பும், அலுவலகத் திறப்பும் இடம் பெற்றன.

கட்சியின் ஆதரவாளர்களால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்த நிகழ்வுக்கு வேட்பாளர் ஜெமீல் பிரதம அதிதியாக கலந்து கொண்டார்.

கிழக்கு மாகாண சபையின் உறுப்பினராக இருந்த காலத்தில் சகல இன மக்களையும் அரவணைத்துக் கொண்டு பல்வேறுபட்ட அபிவிருத்திகளையும் அவர் மேற்கொண்டுள்ளார். தொழில் வாய்ப்புக்களையும் வாழ்வா தாரத் திட்டங்களையும் முன்னெடுத்துச் சென்ற ஒருவர் நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் அவர் போட்டியிடவுள்ளார் என்று மக்கள் கருத்துத் தெரிவித்தனர்.

நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# தமிழினத்தின் கடப்பாடு

ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்பார்கள்.

அதுபோல தென்னிலங்கை அரசியல் கள நிலைவரங்கள் பற்றிய சோதனைக்கு நேற்று வெளியான எல்பிட்டிய பிரதேச சபை தேர்தல் முடிவுகள் ஓரளவு விடை கொள்ளத் தக்கவையாக வந்துள்ளன.

ஜனாதிபதி தேர்தலில் வெற்றி பெற முடிந்த தேசிய மக்கள் சக்திக்கு இந்த தேர்தலிலும் வெற்றி கிடைத்தாலும், அதனால் ஐம்பது வீத வாக்குகளை சுவீகரித்துக் கொள்ள முடியவில்லை என்பது தெளிவாகியிருக்கின்றது.

ஜனாதிபதி தேர்தலில் 42 வீத வாக்குகளோடு அதிகாரத்தை கைப்பற்றிய அநுர குமார திஸநாயக்கவின் கட்சிக்கு எல்பிட்டிய பிரதேச சபையில் 47.64 வீத வாக்குகளையே பெற முடிந்திருக்கின்றது.

இதே நிலைமைதான் பெரும்பாலும் இன்னும் 18 நாள்களில் நடக்கப் போகின்ற பொதுத் தேர்தலிலும் மக்கள் கணிப்பீடாகக் அமையும் என்று கொள்ளலாம்.

இதுதான் நிலைமை என்றால், புதிய அரசு அறுதிப்பெரும்பான்மையைப் பெறக்கூடிய மட்டுமட்டான நிலையில் தேர்தலை வெல்லும் என்று கருத முடியும்.

ஆயினும் மக்கள் எதிர்பார்க்கின்ற முறைமை மாற்றத்தை முன்னெடுப்பதற்கு இந்த ஆதரவு ஆளும் தரப்புக்குப் போதுமானதாக இருக்காது என்பது தெளிவானது.

இந்தச் சமயத்தில்தான் சிறுபான்மை தரப்பினரின் நாடாளுமன்ற வலிமை முக்கியத்துவம் பெறப் போகின்றது.

இதனால்தான் இந்தப் பொதுத் தேர்தல் மிக முக்கியமானது என்று தமிழர் தரப்பின் தலைவர்கள் சுட்டிக்காட்டி வருகிறார்கள்.

வழமைக்கு மாறாக, தனித்து அதிக அளவு பெரும்பான்மையை பெற முடியாத ஓர் அரசு தேசிய இனப் பிரச்சனை போன்ற விடயங்களுக்கும் தீர்வு காணும் தனது நிகழ்ச்சி நிரலை முன்கொண்டு செல்வதற்கு சிறுபான்மையினரில் தங்கி இருக்க கூடிய - தங்கியிருக்க வேண்டிய - நிலைமை உருவாகப் போகின்றது.

இந்தச் சமயத்தில், உறுதியாகவும், தெளிவாகவும், புத்தி சாதுரியமாகவும், தந்திரமாகவும், விலை போகாமலும் தம் இனத்திற்கு உழைக்கக்கூடிய - போராடக் கூடிய - தலைமையை வலிமையோடு நாடாளுமன்றத்துக்கு அனுப்பி வைப்பது பாதிக்கப்பட்ட சிறுபான்மை தரப்பினருக்கு முக்கியமானதாகும்.

நாடாளுமன்றப் பெரும்பான்மையை மட்டுமட்டாகப் பெறக்கூடிய நிலைமையை ஆளும் தேசிய மக்கள் சக்தி பெற்றுக் கொண்டாலும், அது வலிமையாக காலூன்றி முன்நகர்வதற்கு பலமுள்ள பிற கட்சிகளில் அது தங்கி இருக்க வேண்டிய தேவை வரும்.

ஆளும் தரப்பின் அந்தத் தேவையை வசமாக பயன்படுத்தக்கூடிய சிறுபான்மை பிரதிநிதித்துவத்தை நாடாளுமன்றுக்கு இம்முறை சிறுபான்மையினர் அனுப்பி வைக்க வேண்டும்.

ஆளும் தரப்பு இந்தத் தேர்தலில் வென்றாலும், அதற்கு எதிரணியில் வலிமையான எதிர்க்கட்சி நிலைபெறக் கூடிய வாய்ப்புகள் அதிகம் உள்ளன என்பதைத்தான் நேற்றைய எல்பிட்டிய பிரதேச சபை தேர்தல் முடிவுகள் வெளிப்படுத்தி நிற்கின்றன.

இந்தச்சமயத்தில் ஒன்றுபட்டு வலிமையாக நிற்கும் சிறுபான்மை தரப்பினரின் நாடாளுமன்றப் பிரதிநிதித்துவம் தம் இனத்துக்கு காத்திரமான விடயங்களைப் பெற்றுத் தரக்கூடிய வாய்ப்பைத் தேடித் தரும் என்பதுதான் நாம் இப்போது ஊகிக்கக்கூடிய நிலைமையாகும்.

ஆகையால் இந்தச் சந்தர்ப்பத்தை தமிழ்த் தேசிய தரப்பின் பிரதிநிதிகள் சரியாகப் பயன்படுத்தக் கூடிய வகையில், அந்தப் பிரதிநிதிகளை தேர்ந்தெடுத்து அனுப்புவது தமிழ்த் தேசிய இனத்தின் முக்கிய கடப்பாடாகவும் பொறுப்பாகவும் இருக்கின்றது.

தமிழர்கள் தம் பிரதிநிதித்துவத்தை சிதறவிட்டு, சில்லறைகளாக நாடாளுமன்றத்துக்குப் பிரதிநிதிகளை அனுப்பினால் அதன் பயன் பூஜ்ஜியமாகவும், மறுபுறத்தில் பாதிப்பாகவும் அமைந்துவிடும் என்பதைத் தமிழ் மக்கள் உணர்ந்து கொள்ள வேண்டும்.

எல்பிட்டியத் தேர்தல் முடிவுகள் சொல்லும் செய்தி தெளிவானது. இப்போதைய ஆளும் தரப்பு வலிமையான - தகுதியான - பெரும்பான்மையோடு ஆட்சிக்கு வருவதற்கான வாய்ப்புகள் இல்லை என்பதைத்தான் அந்தத் தேர்தல் முடிவுகள் நமக்குக் காட்டி நிற்கின்றன.

இந்தச் செய்தியை உள்வாங்கி, அத்தகைய பொதுத் தேர்தல் முடிவின் வாய்ப்பை சாதகமாக பயன்படுத்திக் கொள்வதற்கு சிறுபான்மை இனங்கள் - குறிப்பாக தமிழினம் - தனது நாடாளுமன்ற பிரதிநிதித்துவத்தை தகவமைத்துக் கொள்ள வேண்டும்.

தவறுவோமேயானால் தேசிய இனப் பிரச்சினைக்கு நீதி, நியாயமான தீர்வு ஒன்றை பெறுவதற்கு கிடைத்த அரிய சந்தர்ப்பத்தையும் தமிழினம் கோட்டை விட்டுவிடுவதாக அது முடிந்து விடும்.

எல்பிட்டிய தேர்தல் முடிவு நமக்கு உணர்த்தி நிற்கும் பாடத்தை புரிந்து கொண்டு, அந்தச் சந்தர்ப்பத்தைச் சரியாகப் பயன்படுத்துவதற்காக சரியான பிரதிநிதிகளை தமிழினம் இம்முறை தேர்ந்தெடுத்து அனுப்ப வேண்டும்.

# ஏறாவூர் எல்லைக் கிராமங்களின் வாக்குகளைச் சூறையாட முயற்சி!

## வேட்பாளர் சுபைர் குற்றச்சாட்டு

(பழுவூரான்)

காத்தான்குடி மக்களிடத்தில் செல்வாக்கிழந்து பலவீனமடைந்துள்ள ஹிஸ்புல்லா ஏறாவூர் எல்லைக் கிராமங்களில் பொய்களைக் கூறி வாக்குகளைச் சூறையாட முயற்சித்து வருகிறார். அவருடைய மோசமான அரசியல் செயற்பாட்டிலிருந்து ஏறாவூர் மண்ணையும் மக்களையும் பாதுகாப்பதற்கு ஏறாவூரின் சிரேஷ்ட அரசியல் தலைவர்கள் முன்வர வேண்டும் என ஐக்கிய மக்கள் சக்தியின் மட்டக்களப்பு மாவட்ட வேட்பாளரும் கிழக்கு மாகாண முன்னாள் அமைச்சருமான எம்.எஸ்.சுபைர் தெரிவித்தார்.

ஏறாவூர் மிச்நகரில் வெள்ளிக்கிழமை (25) இடம்பெற்ற இளைஞர்களுடனான சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில் தெரிவித்ததாவது,

இம்முறை நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் ஏறாவூர் பிரதேசத்தின் சிரேஷ்ட அரசியல் தலைவர்கள் யாரும் போட்டியிடாத நிலையில் ஏறாவூரின் பிரதிநிதித்துவத்தை பெற்றுக் கொள்வதற்காக மக்கள் ஒன்றுபடும் நிலையில் காத்தான்குடியில் பலவீனமடைந்த ஹிஸ்புல்லா, ஏறாவூர் எல்லைக் கிராமங்களுக்குள் நுழைந்து அந்த மக்களுக்குப் போலியான வாக்குறுதிகளை வழங்கி வாக்குகளைச் சூறையாட முயற்சித்து வருகிறார்.

தோல்வியில் இருந்து மீள்வதற்குக் கடும் பிரயத்தனங்களை மேற்கொண்டு வரும் ஹிஸ்புல்லா, ஏறாவூர், ஓட்டமாவடி எல்லைக் கிராமங்களுக்குள் ஊடுருவி சிறுபிள்ளை போன்று போலிக் கணக்குகளை காட்டுகின்றார். அவர் மக்களை ஏமாற்றி வாக்குத் தேடுகின்ற இந்த மோசமான பிரச்சாரத்தில் இருந்து எம்மவர்களை பாதுகாப்பது சகலருடைய பொறுப்புமாகும்.

அவர் இவ்வாறான போலிப் பிரச்சாரத்தை முன்னெடுத்த போது அண்மையில் ஓட்டமாவடி இளைஞர்களால் விரட்டியடிக்கப்பட்டார். இவருடைய ஊடுருவல் எமது ஊருக்குப் பாரிய ஆபத்தாகும்.

ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரசை அழிப்பதற்கும் அக்கட்சியின் தலைவரை மிகக் கேவலமாகவும் கடந்த காலங்களில் விமர்சித்த ஹிஸ்புல்லா இன்று அந்தக் கட்சியினையும் தலைவரையும் பிரச்சார மேடைகளில் புகழ்பாடுவது வேடிக்கையாகவுள்ளது.

பல்லாண்டு காலமாக ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸை அழிப்பதற்கும் அந்தக் கட்சிப் போராளிகளுக்கும் பல்வேறு அநியாயங்களைச் செய்த அவர் இன்று கட்சியின் விசுவாசியாக மாறியிருக்கிறார்.

ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரசின் வளர்ச்சிக்கும் அதன் உயர்ச்சிக்கும் உழைத்த ஏறாவூரின் சிரேஷ்ட அரசியல் தலைவர்கள் இன்று அந்தக் கட்சியின் தலைவரால்தூக்கிவீசப்பட்டிருக்கிறார்கள். இதுதான் அந்தக் கட்சியினுடைய நிலைமை. ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியினதும் ஹிஸ்புல்லாவினதும் போலி அரசியல் செயற்பாடுகள் இந்தப் பிரதேசத்தில் இருந்து துடைத்தெறியப்பட வேண்டும்.

அழிந்துபோன ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரசுக்கும் ஹிஸ்புல்லாவுக்கும் வாக்களிப்பதில் இருந்து எமது மக்களைப் பாதுகாப்பது உலமாக்கள், கல்வியலாளர்கள், இளைஞர்களுடைய கடமையாகும்.

இந்த விடயத்தில் ஏறாவூரின் சிரேஷ்ட அரசியல் தலைவர்கள் கவனம் செலுத்த வேண்டும். ஐக்கிய மக்கள் சக்தி இம்முறை மாவட்டத்தில் நிச்சயமாக இரண்டு ஆசனங்களைப் பெறும். ஏறாவூரின் சிரேஷ்ட அரசியல் தலைவர்கள் இன்னும் மௌனமாக இருக்காது ஊரின் பிரதிநிதித்துவத்தைப் பாதுகாக்க முன்வர வேண்டும்.- என்றார்.




# அனைத்து இன மக்களுக்கும் அபிவிருத்தி சென்றடைய வேண்டும்

## றிஸ்லி முஸ்தபா தெரிவிப்பு



(எம். எப். றிபாஸ்)

நடைபெறவுள்ள நாடாளுமன்ற தேர்தலில் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் நாடளாவிய ரீதியில் அதிக மான ஆசனங்களை பெற்று சிறு பான்மை சமூகத்துக்காக குரல் கொடுக் கும் என முன்னாள் உயர்கல்வி பிரதி அமைச்சர் மர்ஹூம் மயோன் முஸ்தபா வின் புதல்வர் றிஸ்லி முஸ்தபா தெரி வித்தார்.

திகாமடுல்ல மாவட்டத்தில் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியில் ஒன்பதாம் இலக்கத்தில் போட்டியிடும் றிஸ்லி முஸ்தபாவை ஆதரித்து கல் முனையில் நடைபெற்ற தேர்தல் பிரச் சாரக் கூட்டமொன்றில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்

தொடர்ந்தும் அவர் தனது உரையில் அம்பாறை மாவட்டத்திலுள்ள அனைத்து இன மக்களும் பல்வேறு பிரச்சினைக ளுக்கு முகம் கொடுத்து வருகின்றனர் கடந்த காலங்களில் மக்களின் வாக்குக ளைப் பெற்று நாடாளுமன்றம் சென்ற வர்கள் ஆக்க பூர்வமான எந்த வேலைக ளையும் பெரிதாக செய்ததாக தெரிய வில்லை.

அகில இலங்கை மக்கள் காங்கிர ஸின் பின்னாள் மக்கள் அணி திரண்டு வருவதை தாங்கிக் கொள்ள முடியாத சில கட்சிகள் தேவையில்லாத பொய்க ளைக் கூறி ஏமாற்றுகின்றார்கள் என் பதை மககள் நன்கு அறிந்து வைத்திருக் கிறார்கள்.

எனவேதான் இந்தத் தேர்தலில் போட்டியிடும் என்னை அமோக வாக்குக ளால் வெற்றி பெறச் செய்வதன் மூலம் உங்களின் எதிர்காலம் சிறப்பாக அமையும்.- என்றார்.





# கொழும்புத் துறையில் இடம்பெற்ற டெங்கு ஒழிப்புக் களப் பணிகள்!

## யாழ். பிராந்திய சுகாராத சேவைகள் பணிப்பாளரும் களத்தில்

யாழ். குடாநாட்டில் தற்போதைய பருவமழையைத் தொடர்ந்து நுளம்புக ளின் பெருக்கம் அதிகரித்துள்ள நிலை யில் சுகாதார அமைச்சின் அறிவுறுத்த லுக்கு அமைய தேசிய டெங்குக் கட்டுப் பாட்டு வாரம் அனுஷ்டிக்கப்பட்டு வரு கிறது.

இதன் தொடர் நிகழ்வும் களப் பணிக ளும் நேற்று (26) கொழும்புத்துறைப் பகுதியில் இடம்பெற்றது.

வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் சமன் பத்திரன மற்றும் யாழ். பிராந்திய சுகாதார சேவை கள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ. கேதீஸ்வரன் ஆகியோரின் வழி காட்டலுக்கு அமைய தேசிய டெங்கு ஒழிப்பு வாரம் யாழ். மாநகர சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் இடம்பெற்று வருகிறது.

இந்த நிகழ்வில் யாழ். பிராந்திய சுகாராத சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ. கேதீஸ்வரன் கொழும்புத்துறைப் பகுதிகளுக்கு நேரில் சென்று நிலவரங்களைப் பார்வை யிட்டார்.

யாழ். மாநகர சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் த. தவரூபன், சுகாதார உத்தியோகத்தர்கள், யாழ். சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையின் டெங்குக் களப் பணியாளர்கள், இராணு வத்தினர், பொலிஸார், கொழும்புத்துறை பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பி.சிவகு மார் மற்றும் பிரதம பொதுச் சுகாதாரப் பரிசோதகர் கு. பத்மகுமார் ஆகியோர் பங்குபற்றினர்.

நுளம்பு பரவும் இடங்களை அழிப் பது தொடர்பாகவும் டெங்கு நோயில் இருந்து பாதுகாப்பது தொடர்பாகவும் சுகாதாரக் குழுவால் மக்களுக்கு அறி வுறுத்தப்பட்டது. நுளம்பு பரவும் ஆபத் தான இடங்கள் இனங்காணப்பட்டு சுகா தாரக் குழுவால் அழிக்கப்பட்டன.





# பருவப்பெயர்ச்சி மழை ஆரம்பித்ததால் டெங்கு நுளம்பின் பெருக்கம் அதிகரிப்பு

## கல்முனை பிராந்திய பணிப்பாளர் வைத்திய கலாநிதி சகீலா இஸ்ஸடீன் தெரிவிப்பு

(றியாஸ் ஆதம்)

வட கீழ் பருவப் பெயர்ச்சி மழை ஆரம்பித்துள்ள நிலையில் டெங்கு நுளம்பின் பெருக்கம் அதிகரித்து டெங்கு நோய் மிக வேகமாக பரவக்கூடிய நிலமைகள் காணப்படுகின்றன. இந்தக் காலத்தில் பொது மக்கள் டெங்கு நுளம்பு பெருகாதவாறு தங்களது வீடு உள்ளிட்ட சுற்றுச்சூழலை சுத்தமாக வைத்துக் கொள்ள வேண்டும் என்று கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி திருமதி சகீலா இஸ்ஸடீன் தெரிவித்தார்

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடகீழ் பருவப் பெயர்ச்சி மழை காலத்தில் டெங்கு நுளம்பின் பெருக்கம் அதிகரித்து டெங்கு நோய் மிக வேகமாக பரவக் கூடிய ஆபத்தான நிலமைகள் காணப்படுகின்றன. கல்முனை பிராந்தியத்தில் டெங்குவினை கட்டுப்படுத்துவதற்குரிய வேலைத் திட்டங்களை முன்னெடுத்து வருகின்றோம்.



எனவே கல்முனை பிராந்திய மக்கள் தங்களது வீடு மற்றும் வீட்டுச் சூழலில் டெங்கு பெருகக் கூடிய இடங்களை அழித்து துப்பரவு செய்துகொள்ள வேண்டியது காலத்தின் தேவையாகும்.

பிராந்திய தொற்று நோய் தடுப்பு பிரிவு மற்றும் சுகாதார பூச்சியல் உத்தியோகத்தர்களின் அறிக்கையின் படி பின்வரும் விடயங்களின் ஊடாக டெங்கு நுளம்பு பெருகக் கூடிய வாய்ப்புக்கள் உள்ளன. இதிலிருந்து பாதுகாப்பு பெற பின்வரும் விடயங்களை கடைப்பிடிக்குமாறு பொது மக்களை கேட்டுக்கொள்கின்றேன்.

சுற்றுச்சூழலில் காணப்படும் டெங்கு நுளம்பு பெருகக்கூடிய பொருள்களை அழித்தல், வீடுகளிலில் உள்ள கிணறுகளில் மீன் குஞ்சுகளை விடுதல் மற்றும் நுளம்பு வலைகளால் கிணற்றை மூடுதல், பூச்சாடிகளில் நீர் தேங்கி நிற்காதவாறு அவற்றைத் தினமும் பராமரித்தல், வீடுகளில் அழகுக்காக நீர் போத்தல்களில் வளர்க்கப்படும் பூ மரங்களை அகற்றுதல், வீட்டு சமயலறைகளில் உள்ள சிங் கசிவுகளில் இருந்து வெளியாகும் நீரை சேமிக்கும் பாத்திரங்களை நாளாந்தம் அவதானித்து சுத்தம் செய்தல். அவ்வாறான பாத்திரங்களை நன்றாக தேய்த்துக் கழுவுதல், வீடு உள்ளிட்ட சூழலில் நீர் தேங்கி நிற்கும் வகையில் ஏற்படும் கசிவுகளை உடன் திருத்தம் செய்தல், பாவனையற்ற மலசலகூடங்களின் குழிகளை மூடியவாறு வைத்தல், வளர்ப்பு கோழி மற்றும் பிராணிகளுக்கு நீர் வைக்கும் பாத்திரங்களை தினமும் சுத்தம் செய்தல், பாவனையற்ற அல்லது தேவையற்ற குழாய்க் கிணறுகளை அகற்றுதல், பாவனையில் உள்ள குழாய்க் கிணறுகளின் உள்ளே நுளம்பு போகாத வகையில் துணியால் கட்டி வைத்தல், வீட்டுச் சூழலில் உள்ள மரங்களிலுள்ள பொந்துகளை சிமெந்து கொண்டு அடைத்தல்.

அரச மற்றும் பொது நிறுவனங்கள் டெங்கு நுளம்பு பெருகாமல் மேற்குறிப்பிடப்பட்ட விடயங்களை கடைப்பிடித்து சூழலை சுத்தமாக வைத்துக்கொள்ள வேண்டும். குறிப்பாக டெங்கைக் கட்டுப்படுத்துவதற்கு பொது மக்களதும் ஒத்துழைப்பு அவசியமாகும்.- என்றார்.



# தமிழ்த் தேசியத்தோடு எமது பயணம் இருக்கும் என்கிறார் நடனதேவன்

(த.சுபேசன்)



மிக நீண்ட காலமாகத் தென்மராட்சிக்கு நாடாளுமன்ற பிரதிநிதித்துவம் இன்மையால் பிரதேசத்தில் தீர்க்கப்படாத நிலையில் ஏராளம் பிரச்சினைகள் காணப்படுவதாக தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் யாழ்ப்பாண தேர்தல் மாவட்ட நாடாளுமன்ற தேர்தல் வேட்பாளர் ம.நடனதேவன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக ஊடகங்களுக்கு மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில்,

தென்மராட்சிக்கு மிக நீண்ட காலமாக நாடாளுமன்ற உறுப்பினர் இல்லாத குறைபாடு காணப்படுகின்றது.

இதனால் தென்மராட்சியின் அரச திணைக்களங்களிலும் சரி பொதுவான தளங்களிலும் சரி தீர்க்கப்பட முடியாத ஏராளமான பிரச்சினைகள் காணப்படுகின்றன.

நான் சாவகச்சேரி நகரசபை உறுப்பினராக இருந்த வேளையில் மக்களின் பிரச்சினைகளை நேரடியாக அறிந்து கொண்டேன். எனவே அந்த மக்களுடைய பிரச்சினைகளை தீர்க்க வேண்டிய பொறுப்பு எமக்கு உள்ளது.

தென்மராட்சியின் சில பிரச்சினைகளை நகரசபைக் கட்டமைப்புக்குள் நின்று கொண்டு தீர்த்து வைத்திருந்தோம். தீர்க்கப்படாத பிரச்சினைகளை தென்மராட்சிக்கான நர்டாளுமன்ற பிரதிநிதித்துவம் ஊடாக தீர்த்துக் கொள்ள முடியும்.

தற்போது சாவகச்சேரியில் வைத்தியசாலைப் பிரச்சினை,பொது விளையாட்டு மைதானப் பிரச்சினை எனத் தீர்க்கப்படாத பிரச்சினைகள் சில காணப்படுகின்றன. அவ்வாறான பிரச்சினைகளை எதிர்காலத்தில் தீர்க்க வேண்டிய பொறுப்பு எமக்கு உண்டு.

அத்தோடு தமிழ்த் தேசியத்தோடு எமது பயணம் இருக்கும்.அற்ப சலுகைகளுக்காக விலை போகக் கூடியவர்களாக இருக்கக் கூடாது.- என்றார்.



# பெற்றோர்களின் பங்களிப்புடன் கல்முனை பாலிகாவுக்கு உதவி!

(நூருல் ஹுதா உமர்)

கல்முனை கல்வி வலயம் கல்முனை மஹ்மூத் மகளிர் கல்லூரி (தேசிய பாடசாலை) யின் 2026 உயர்தர விஞ்ஞானப் பிரிவு மாணவிகளின் பெற்றோர்களிடம் அதிபர் திருமதி ஏ.பி. நஸ்மியா சனூஸாவால் முன்வைக்கப்பட்ட வேண்டுகோளின் பிரகாரம் புகைப்பட நகல் இயந்திரம் ஒன்றை பெற்றோர்கள் அன்பளிப்பு செய்துள்ளனர்.

இந்தப் புகைப்பட நகல் இயந்திரம் உத்தியோக பூர்வமாக கடந்த வெள்ளிக்கிழமை (25) கல்லூரி முதல்வர் ஏ.பி.நஸ்மியா சனூஸிடம் கையளிக்கப்பட்டது.

இந்த உயரிய பணிக்குப் பங்களித்த அனைத்து பெற்றோர்களுக்கும் பாடசாலை சமூகம் சார்பாக ஆத்மார்த்தமான நன்றிகளை தெரிவித்துக்கொள்கிறார் என்று அதிபர் திருமதி ஏ.பி. நஸ்மியா சனூஸ் தெரிவித்தார்.






# கிழக்கின் ஓவியத் திருவிழா!

(பழுவூரான்)

கிழக்குமாகாணப்பண்பாட்டலுவல்கள் திணைக்களமும் சுவாமி விபுலானந்தா அழகியற் கற்கைகள் நிறுவகமும் இணைந்து நடத்திய “கிழக்கின் ஓவியத் திருவிழா” கடந்த வெள்ளிக்கிழமை (25) மட்டக்களப்பு காந்திப் பூங்காவில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

“கிழக்கின் ஓவியத் திருவிழா” எனும் தலைப்பில் ஆரம்பித்து வைக்கப்பட்ட ஓவியக் கண்காட்சியானது சனிக்கிழமை (26) மற்றும் ஞாயிற்றுக்கிழமை (27) இடம் பெற்றது.

இந்த நிகழ்வுக்குப் பிரதம அதிதிகளாக கிழக்குப் பல்கலைக்கழக





சுவாமி விபுலானந்தா அழகியற் கற்கைகள் நிறுவகத்தின் பணிப்பாளர் கலாநிதி புளோரன்ஸ் பாரதி கென்னடி மற்றும் கிழக்கு மாகாணப் பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் சரவணமுத்து நவநீதன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வில் மாவட்ட கலாசார உத்தியோகத்தர் தங்கராசா மலர்ச்செல்வன் உள்ளிட்ட கிழக்குப் பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர்கள், ஓவியர்கள், கலைஞர்கள், கலாசார உத்தியோகத்தர், பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் ஊடகவியலாளர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.





# முருகேசு சுவாமிகளின் 91 ஆவது ஜனன தினம்!

(பழுவூரான்)

குருதேவர் காயத்திரி சித்தர் முருகேசு சுவாமிகளின் 91 ஆவது ஜனன தின பூசை நேற்று சனிக்கிழமை (26) மாலை புதுமுகத்துவாரம் காயத்திரி ஆலயத்தில் அபிஷேகத்துடன் இடம்பெற்றது.

தொடர்ந்து பஜனை, காயத்திரி பூசை,யாகம் என்பன நடைபெற்றன.

இதன்போது சுவாமிகளின் உருவப்படம் தாங்கிய பேழை ஊர் வலமாக எடுத்துச் செல்லப்பட்டு, பொன்னூஞ்சல் ஆட்டுதலுடன் நிகழ்வுடன் நிறைவு பெற்றமை குறிப்பிடத்தக்கது.



# தமிழ்ப் பிரதிநிதித்துவத்தை ஒழிக்கும் சூழ்ச்சிகளில் மக்கள் சிக்கக்கூடாது!

## முன்னாள் அமைச்சர் ஜீவன் தொண்டமான் தெரிவிப்பு

(க.கிஷாந்தன்)

தமிழ்ப ் பிரதிநிதித்துவத்தை இல்லாது செய்யும் சூழ்ச்சியில் மக்கள் சிக்கக்கூடாது. எமது பிரதிநிதித்துவத்தை மக்கள் தக்கவைத்துக் கொள்ள வேண்டும்.

இவ்வாறு முன்னாள் அமைச்சர் ஜீவன் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

கொட்டகலை சீ.எல்.எப். கேட்போர் கூடத்தில் இன்று (27) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துக் கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

தேசிய மக்கள் சக்தியின் தொழிற் சங்கமானது, தோட்டத் தொழிலாளர்களுக்கு 2 ஆயிரம் ரூபா அடிப்படை சம்பளம் வழங்கப்பட வேண்டும் என வலியுறுத்தி வந்தது.

எனவே, சம்பள நிர்ணய சபையைக் கூட்டி அதற்கு உரிய யோசனையை அரசு முன்வைக்க வேண்டும். அதற்கு நாம் முழு ஆதரவையும் வழங்குவோம்.

கடந்த ஆட்சியில் குறுகிய காலப் பகுதிக்குள் மலையக மக்கள் தொடர்பில் அரசியல், பொருளாதார மற்றும் சமூகம் சார்ந்த திட்டங்களை நாம் முன்னெடுத்திருந்தோம். வீடமைப்புத் திட்டம்கூட மீள ஆரம்பிக்கப்பட்டது.

எனினும், ஜனாதிபதி தேர்தலுக்கு பிறகு மலையக மக்கள் தொடர்பில் இன்னும் எவ்வித திட்டமும் முன்னெடுக்கப்படவில்லை. அபிவிருத்தி திட்டங்கள் முன்னெடுக்கப்படுமா என்ற சந்தேகம் மக்கள் மத்தியில் உள்ளது.



பொருள்களின் விலைகள் குறைக்கப்படும் என ஜனாதிபதி தேர்தலின்போது தேசிய மக்கள் சக்தியினர் உறுதியளித்திருந்தனர். ஆனால் பொருள்களின் விலை தற்போது அதிகரித்துள்ளன. நாம் ஜனாதிபதியை விமர்சிக்கவில்லை. இன்னும் பொருளாதார நெருக்கடி உள்ளது. மக்களும் சற்று பொறுமை காக்க வேண்டும். ஆட்சி மாற்றத்தால் ஏற்படும் விளைவுகளை சந்திக்க வேண்டும்.

எரிபொருள் விலைகூட கணிசமான அளவு குறையும் என கூறியிருந்தனர். ஆனால் ஓரளவுதான் குறைந்துள்ளது. எமது ஆட்சியில் கொண்டுவரப்பட்ட எரிபொருள் விலை சூத்திரத்துக்கமையவே செயற்பட வேண்டியுள்ளது.

பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சம்பளப் பிரச்சினை தொடர்பில் சிலர் இன்று கேள்வி எழுப்புகின்றனர். அடிப்படை நாள் சம்பளமாக ஆயிரத்து 350 ரூபாவும், ஊக்குவிப்பு தொகையாக 350 ரூபாவையும் பெற்றுதருவோம் என நாம் உறுதியளித்தோம். அதற்கான வர்த்தமானியும் வெளியானது.

தூரநோக்கு சிந்தனை அடிப்படையில் நாம் கடந்த ஆட்சியின்போது அடிப்படை சம்பளம் ஆயிரத்து 350 ரூபாவுக்கு இணங்கி இருக்காவிட்டால் இன்று அந்த அதிகரிப்புக்கூட கிடைக்கப்பெற்றிருக்காது. எஞ்சிய தொகையை பெற்றுக்கொடுப்பதற்கு முயற்சிகளை முன்னெடுப்போம்.

தேசிய மக்கள் சக்தியின் தொழிற் சங்கமானது, தோட்டத் தொழிலாளர்களுக்கு 2 ஆயிரம் ரூபா அடிப்படை சம்பளம் வழங்கப்பட வேண்டும் என வலியுறுத்தி வந்தது. எனவே, சம்பள நிர்ணய சபையைக்கூட்டி அதற்கு உரிய யோசனையை அரசு முன்வைக்க வேண்டும். அதற்கு நாம் முழு ஆதரவையும் வழங்குவோம்.

அதேவேளை கண்டி, உன்னஸ்கிரிய பகுதியில் அரச பெருந்தோட்ட யாக்கத்தால் கடிதமொன்று அனுப்பட்டுள்ளது. 14 நாட்கள் தொடர்ச்சியாக வேலைக்கு வராவிட்டால் வெளியேற்றப்படுவீர்கள் என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

எனவே, எமக்கான பிரதிநிதித்துவம் இருந்தால்தான் இவ்வாறான சவால்களை எதிர்கொள்ள வேண்டும். தமிழ்ப் பிரதிநிதித்துவத்தை இல்லாது செய்யும் சூழ்ச்சியில் மக்கள் சிக்கக்கூடாது. எமது பிரதிநிதித்துவத்தை மக்கள் தக்கவைத்துக்கொள்ள வேண்டும்.- என்றார்.

# மன்னார் மாவட்டத்தில் மழையால் ஆயிரத்து 898 குடும்பங்கள் பாதிப்பு

(மன்னார் எஸ்.ஆர்.லெம்பேட்)

மன்னார் மாவட்டத்தில் கடந்த வியாழக்கிழமை (24) காலை வரை பெய்து வந்த கடும் மழையால் 1898 குடும்பங்களைச் சேர்ந்த 7023 நபர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவு தெரிவித்துள்ளது.

இதேவேளை மன்னார் மற்றும் நானாட்டான் பிரதேச செயலக பிரிவுகளில் சில இடங்கள் வெள்ளத்தில் மூழ்கி உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்கள் மூன்று இடைத்தங்கல் முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். மன்னார் செல்வநகர் ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலய பொது மண்டபத்தில் 16 குடும்பங்களைச் சார்ந்த 53 நபர்களும், எமில் நகர் பகுதியில் அன்னை தெரேசா பாடசாலையில் 43 குடும்பங்களைச் சார்ந்த 158 நபர்களும், ஓலைத்தொடுவாய் பகுதியில் 03 குடும்பங்களைச் சேர்ந்த 11 நபர்கள் இடம்பெயர்ந்து பொது இடத்தில் தங்க வைக்கப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.



மன்னார் பிரதேச செயலர் பிரிவில் மன்னாரில் பெய்த கனமழை காரணமாக மொத்தமாக 1608 குடும்பங்கள் சார்ந்த 5883 நபர்கள் கடும் பாதிப்புகளுக்கு உள்ளாகியுள்ளனர்.

நானாட்டான் பிரதேச செயலகப் பிரிவில் 290 குடும்பங்களைச் சார்ந்த 1390 நபர்கள் பாதிப்புகளுக்கு உள்ளாகி யுள்ளனர்.

பாதிப்படைந்த மக்களுக்கு மன்னார் மாவட்ட செயலகம், அனர்த்த முகாமைத்துவ பிரிவு, பிரதேச செயலகங்கள் மற்றும் கிராம அலுவலர்கள் ஊடாக நிவாரணப் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# விக்கிரவாண்டி அருகே இன்று த.வெ.க. மாநாடு; தலைவர் விஜய் கொடியேற்றி உரையாற்றுகிறார்



தமிழக வெற்றிக் கழகத்தின் முதல் மாநில மாநாடு விழுப்புரம் மாவட்டம் விக்கிரவாண்டி அடுத்துள்ள வி.சாலையில் 'வெற்றிக் கொள்கைத் திருவிழா' என்ற பெயரில் இன்று மாலை நடைபெறுகிறது.

இதையொட்டி, 100 அடி உயர கொடிக்கம்பத்தில் கட்சித்தலைவர் விஜய் கொடியேற்றி உரையாற்றுகிறார்.

மாநாட்டுக்காக 60 அடி அகலம்,170 அடி நீளத்துக்கு மேடை அமைக்கப்பட்டுள்ளது. மேடையில்இருந்து 800 மீற்றர் தொலைவுக்கு விஜய் நடந்து சென்று, தொண்டர்களைச் சந்திக்கும் வகையில் உயர்நிலைப் பாதையும் அமைக்கப்பட்டுள்ளது. மேடைக்கு இடதுபுறம் பெரியார், அம்பேத்கர், காமராஜர், வேலுநாச்சியார், தியாகி அஞ்சலையம்மாள் ஆகியோரது கட்அவுட்களுடன், வலதுபுறம் தமிழன்னை, சேர, சோழ, பாண்டிய மன்னர்கள் மற்றும் விஜய் கட்அவுட் அமைக்கப்பட்டுள்ளது.

மேடைக்கு இடதுபுறம் பெரியார், அம்பேத்கர், காமராஜர், வேலுநாச்சியார், தியாகி அஞ்சலையம்மாள் ஆகியோரது கட்அவுட்களுடன், வலதுபுறம் தமிழன்னை, சேர, சோழ, பாண்டிய மன்னர்கள் மற்றும் விஜய் கட்அவுட் அமைக்கப்பட்டுள்ளது.

மாநாட்டு முகப்பு கோட்டைமதில் சுவர்போல வடிவமைக்கப்பட்டு, அதன் மீது தமிழ்நாடு சட்டப்பேரவை வடிவில் மற்றொரு முகப்பு அமைக்கப்பட்டுள்ளது. தொண்டர்களுக்காக 55 ஆயிரம் இருக்கைகள் போடப்பட்டுள்ளன. மேலும், 40 எல்.இ.டி. திரைகள் வைக்கப்பட்டுள்ளன.

தொண்டர்களுக்கு வழங்குவதற்காக 5 லட்சம் தண்ணீர் பாட்டில்கள், ஒரு லட்சம் பிஸ்கட் பாக்கெட்டுகள் தயாராக வைக்கப்பட்டுள்ளன. மேலும், 300 மொபைல்கழிப்பறைகள் மற்றும் 700 குடிநீர்தொட்டிகள் அமைக்கப்பட்டுள்ளன. வாகனங்களை நிறுத்துவதற்காக 5 இடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. இன்று நண்பகல் 12 மணிமுதல் 2 மணிக்குள் தொண்டர்கள்மாநாட்டுத் திடலை அடைய வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது. மேலும், மாநாட்டு நிகழ்வுகளைஉடனுக்குடன் சமூகவலைதளங்களில் பகிரும் வகையில் தடையில்லா இணையதள வசதிக்கான தற்காலிக மொபைல் டவர் அமைக்கப்பட்டுள்ளது.

கட்சித் தலைவர் விஜய் 100 உயரமுள்ள கொடிக் கம்பத்தில் ரிமோட் மூலம் கட்சிக் கொடியேற்றி, கட்சியின் கொள்கைகளை வெளியிட்டு பேச உள்ளார். மாநாட்டை இரவு 9 மணிக்கு முடிக்கத் திட்டமிடப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

விழுப்புரம், கடலூர், கள்ளக்குறிச்சி, திருவண்ணாமலை, வேலூர், செங்கல்பட்டு, காஞ்சிபுரம் மாவட்டங்களில் இருந்து வந்துள்ள 4,000 பொலீஸார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டுள்ளனர். இதுதவிர, மேடையைச் சுற்றிலும் ஏராளமான 'பவுன்சர்கள்' குவிக்கப்பட்டுள்ளனர்.

கட்சியினர் கூறும்போது, "மாநாட்டுக்கு தனி அழைப்பிதழ் அச்சடிக்கப்பட்டதாகத் தெரியவில்லை. யார் யார் பங்கேற்பார்கள் என்பதும் தெரியவில்லை. எல்லாம் ரகசியமாகவே வைக்கப்பட்டிருக்கிறது" என்றனர்.

இதுதொடர்பில் த.வெ.க. தலைவர் விஜய் தனது எக்ஸ் தளத்தில் குறிப்பிடுகையில்,

"எல்லா வகைகளிலும் நீங்களும், உங்கள் பாதுகாப்புமே எனக்கு முக்கியம். எனவே, மாநாட்டு பயணப் பாதுகாப்பில் அனைவரும் மிக கவனமாக இருக்க வேண்டும். இருசக்கர வாகனப் பயணத்தை தவிர்த்தல் நன்று. உங்கள் பாதுகாப்புக் கருதியே இதைச் சொல்கிறேன்.

அதேபோல, வரும் வழியில் மக்களுக்கோ, போக்குவரத்துக்கோ இடையூறு செய்யாமல் வரவேண்டும். போக்குவரத்து நெறிமுறைகளில் கவனம் செலுத்துவதுடன், மாநாட்டுப் பணிக்காக நக் கழகத் தன்னார்வலர்கள் மற்றும் தனியார் பாதுகாவல் படைக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும். பொலிஸ் பாதுகாப்பு நெறிமுறைகளுக்கும் முழு ஒத்துழைப்பு அளிக்க வேண்டும்.

உங்களின் பாதுகாப்பான பயணத்தை எண்ணியபடியே மாநாட்டுக்கு நான் வருவேன். நீங்களும்அதை மனதில் வைத்தே வாருங்கள். மாநாட்டில் சந்திப்போம், மாபெரும் அரசியல் சரித்திரத்தை நிகழ்த்திக் காட்டுவோம்."– என்று குறிப்பிட்டுள்ளார்.

# சட்டவிரோதமாக தங்கியிருந்த இந்தியர்களை மீண்டும் திருப்பி அனுப்பியது அமெரிக்க அரசு



அமெரிக்காவில் சட்டவிரோதமாக தங்கியிருந்த இந்தியர்கள் திருப்பி அனுப்பப்பட்டனர் என்று உள்நாட்டு பாதுகாப்புத் துறை தெரிவித்துள்ளது.

கல்வி, வேலைவாய்ப்புகளுக் காக அமெரிக்கா செல்ல வேண்டும் என்று உலகளவில் ஏராளமானோர் ஆர்வமாக உள்ளனர். அதேநேரத் தில் சட்டவிரோதமாக அமெரிக்காவுக்குள் நுழைய தொடர்ந்து முயற்சி செய்பவர்களின் எண்ணிக்கையும் அதிகரித்து வருகிறது.

குறிப்பாக கொலம்பியா, ஈக்குவடார், பெரு, எகிப்து, மோரிடோனியா, செனகல், உஸ்பெகிஸ்தான், சீனா, இந்தியா உட்படபல நாடுகளில் இருந்து சட்டவிரோதமாக அமெரிக்காவுக்குள் நுழைய பலர் முயற்சிக்கின்றனர். அவர்களை தடுத்து நிறுத்த அமெரிக்க அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

இந்த நிலையில், சட்டவிரோதமாக தங்கியிருந்த இந்தியர்களை கடந்த 22 ஆம் திகதி திருப்பி அனுப்பியதாக அமெரிக்க உள்நாட்டு பாதுகாப்புத் துறை நேற்று தெரிவித்தது. ஆனால், இந்தியர்கள் எத்தனை பேர் திருப்பி அனுப்பப்பட்டனர் என்ற தகவலை தெரிவிக்கவில்லை.

இதுகுறித்து அமெரிக்க உள்நாட்டு பாதுகாப்புத் துறை துணை செயலர் பொறுப்பு வகிக்கும் மூத்த அதிகாரி கிறிஸ்டி ஏ கேன்கலோ கூறும்போது,

"சட்டவிரோதமாக அமெரிக்காவில் தங்கியிருந்த இந்தியர்களை கடந்த 22 ஆம் திகதி வாடகை விமானத்தை ஏற்பாடு செய்து அனுப்பி வைத்தோம். இந்த நடவடிக்கை இந்திய அரசின் ஒத்துழைப்புடன்தான் எடுக்கப்பட்டது." – என்றார்.

அமெரிக்க உள்நாட்டு பாதுகாப்பு துறை வெளியிட்டுள்ள அறிக்கையில்,

"அமெரிக்காவுக்கு வர சட்டவழிகளைப் பின்பற்ற வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறோம். ஆட்களை கடத்திவருபவர்கள் சொல்லும் வார்த்தைகளை நம்பாதீர்கள். நடப்பு 2024 நிதி ஆண்டில் 145 நாடுகளை சேர்ந்த ஒரு லட்சத்து 60 ஆயிரத்துக்கும் மேற்பட்டோரை அமெரிக்க அரசு அவரவர் நாட்டுக்கு திருப்பி அனுப்பி உள்ளது. இதற்காக 495 விமானங்கள் ஏற்பாடு செய்யப்பட்டன." – என்று எச்சரித்துள்ளது.

கடந்த ஜூன் மாதம் அமெரிக்க எல்லை தொடர்பான அறிவிப்பு உடனடியாக அமலுக்கு வந்தது. அதன்பின், அமெரிக்காவுக்குள் சட்டவிரோதமாக நுழைவதை தடுக்க பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. துறைமுகங்கள், எல்லைப் பகுதிகள் தீவிர கண்காணிப்புக்கு உட்படுத்தப்பட்டுள்ளன. இதனால் அமெரிக்காவின் தென் மேற்கு எல்லைப் பகுதியில் சட்டவிரோதமாக ஊடுருவல் நடப்பது 55 சதவீதம் குறைந்துள்ளது என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.



# இஸ்ரேலின் தாக்குதலில் 4 ஈரான் படையினர் பலி!

இந்த மாத தொடக்கத்தில் ஈரான் நடத்திய ஏவுகணைத் தாக்குதலுக்குப் பதிலடியாக ஈரான் மீது இஸ்ரேல் நடத்திய தாக்குதல்களில் 4 ஈரானிய படையினர் கொல்லப்பட்டனர் என ஈரானிய இராணுவம் தெரிவித்துள்ளது.

இஸ்ரேல் பாதுகாப்புப் படைகள் நேற்று அதிகாலை தெஹ்ரான் மற்றும் மேற்கு ஈரானுக்கு அருகிலுள்ள ஏவுகணை தொழிற்சாலைகள் மற்றும் பிற இராணுவ தளங்களைக் குறிவைத்துத் தாக்கியுள்ளது.

தங்களைத் தற்காத்துக் கொள்ள வேண்டிய பொறுப்பு இருப்பதாகக் கூறிய ஈரானின் வெளியுறவு அமைச்சு, ஈரான் பிராந்திய அமைதி மற்றும் பாதுகாப்பிற்கான அதன் பொறுப்புகளை நிறைவேற்றும் எனவும் குறிப்பிட்டுள்ளது.

கடந்த முதலாம் திகதியன்று இஸ்ரேலை நோக்கி ஈரானினால் ஏவப்பட்ட சுமார் 200 கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணைகளை இஸ்ரேல் தாக்கியளித்திருந்தது.

சுமார் 25 நாள்களின் பின்னர், அதற்கான பதில் தாக்குதலை ஈரான் நடத்தியுள்ளது.






# சிறுபான்மையினருக்கு பாதுகாப்பு கோரி பங்களாதேஷில் பிரம்மாண்ட பேரணி

## ஆயிரக்கணக்கான இந்துக்கள் பங்கேற்பு

பங்களாதேஷில் சிறுபான்மையினருக்கு பாதுகாப்பு வழங்கக் கோரி இந்துக்கள் நடத்திய பிரம்மாண்ட பேரணியில் ஆயிரக்கணக்கானோர் பங்கேற்றனர்.

பங்களாதேஷில் ஷேக் ஹசீனா அரசுக்கு எதிரான மாணவர்கள் போராட்டம் விஸ்வரூபம் எடுத்தது. இதையடுத்து ஷேக் ஹசீனா கடந்த ஓகஸ்ட் 5 ஆம் திகதி பிரதமர் பதவியை இராஜினாமா செய்துவிட்டு இந்தியாவில் தஞ்சமடைந்தார். இதையடுத்து, அங்கு முகமது யூனஸ் தலைமையில் இடைக்கால அரசு அமைந்தது. எனினும், அங்குள்ள இந்துக்களின் வீடுகள், கடைகள், கோயில்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டது. துர்கா பூஜாயின்போதும் இந்தத் தாக்குதல் தொடர்ந்தது.

இந்நிலையில், சனாதன் ஜக்ரன் மஞ்ச் சார்பில் சிட்டகாங் நகரில் உள்ள லால்டிகி மைதானத்தில் நேற்று முன்தினம் மாபெரும் பேரணி நடைபெற்றது. சிறுபான்மையினருக்கு உரிமையை நிலைநாட்ட வலியுறுத்தியும் பாதுகாப்பை உறுதி செய்யக் கோரியும் நடைபெற்ற இந்தப் பேரணியில் பல்லாயிரக் கணக்கான இந்துக்கள் பங்கேற்றனர்.

சனாதன் ஜக்ரன் மஞ்ச் அமைப்பினர் பங்களாதேஷ் அரசுக்கு 8 கோரிக்கைகளை வைத்துள்ளனர். இவற்றை நிறைவேற்றாவிட்டால் போராட்டம் தொடரும் என அறிவித்துள்ளனர்.

சிறுபான்மையினர்களுக்கு எதிரான குற்றச் செயலில் ஈடுபட்டவர்களிடம் விரைவாக விசாரணை நடத்த தீர்ப்பாயம் அமைக்க வேண்டும். வன்முறையில் பாதிக்கப்பட்டவர்களுக்கு உரிய நிவாரணம் வழங்க வேண்டும். சிறுபான்மையினர் பாதுகாப்பு சட்டம் உடனடியாக இயற்ற வேண்டும். சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சகம் உருவாக்க வேண்டும்.

கல்வி நிறுவனங்கள் மற்றும் விடுதிகளில் சிறுபான்மையினருக்காக பிரார்த்தனை அரங்குகளை கட்ட வேண்டும். இந்து, பௌத்தர்கள் மற்றும் கிறிஸ்தவர்கள் நல வாரியங்கள் அறக்கட்டளைகளாக மாற்றப்பட வேண்டும். துர்கா பூஜைக்காக 5 நாள் விடுமுறை அளிக்க வேண்டும். சமஸ்கிருதம் மற்றும் பாலி கல்வி வாரியங்களை நவீனமயமாக்க வேண்டும். இத்தகைய கோரிக்கைகள அவர்கள் முன்வைத்துள்ளனர்.

இந்தப் போராட்டம் தொடர்பான வீடியோவை பங்களாதேஷ் எழுத்தாளரும் நாடு கடந்து வசித்து வருபவருமான தஸ்லிமா நஸ்ரின் எக்ஸ் தளத்தில் வெளியிட்டுள்ளார்.

இதனிடையே, வங்கதேசத்தில் உள்ள ஜமாத்-இ-இஸ்லாமி உள் ளிட்ட அடிப்படைவாத அமைப்புகள் மற்றும் மாணவர் அமைப்புகள், இந்துக்கள் போராட்டத்தில் ஈடு படக்கூடாது என்றும் நாட்டை விட்டு உடனடியாக வெளியேற வேண்டும் எனவும் எச்சரிக்கை விடுத்துள்ளனர். இது இந்துக்கள் மத்தியில் மேலும் அச்சத்தை ஏற்படுத்தி உள்ளது.

கனடா முரசு
பக்கங்கள் 03
ஞாயிற்றுக்கிழமை 27/10/2024

## ஹர்தீப் சிங் நிஜ்ஜாரின் இறப்புச் சான்றிதழை வழங்க மறுப்புத் தெரிவிக்கும் கனடா அரசு

காலிஸ்தான் பிரிவினைவாத தலைவர் ஹர்தீப் சிங் நிஜ்ஜாரின் இறப்புச் சான்றிதழை தேசிய புலனாய்வு முகமை (என்.ஐ.ஏ) கேட்டும் கனடா அரசு வழங்க மறுத்து வருகிறது என இந்திய

02




# ஒன்றாரியோ மாகாணத்தில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் மூவர் உயிரிழப்பு

**கனடாவின் ஒன்றாரியோ மாகாணத்தின் ஹன்ட்வில் பகுதியில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்ட சம்பவத்தில் மூன்று பேர் கொல்லப்பட்டுள்ளனர்.**

**இந்த மரணங்கள் தொடர்பில் ஒன்றாரியோ மாகாண பொலிஸாரும், விசேட விசாரணை பிரிவினரும் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.**

இந்த சம்பவத்தில் இரண்டு பெண்களும் ஒரு ஆணும் கொல்லப்பட்டுள்ளனர் என தெரிவிக்கப்படுகிறது.

இந்த மரணங்களுக்கான காரணங்கள் எதுவும் இதுவரையில் கண்டறியப்படவில்லை.

பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் சம்பவ இடத்திற்கு விரைந்து, வீட்டிற்குள் ட்ரோன் கேமராக்களை அனுப்பி பொலிஸார் சோதனையிட்டுள்ளனர். இதன்போது மூன்று பேர் சடலமாக மீட்கப்பட்டனர்.

உயிரிழந்தவர்கள் தொடர்பான விவரங்கள் எதுவும் வெளியிடப்படவில்லை.









# ஹர்தீப் சிங்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ள.

கடந்த ஆண்டு ஜூன் மாதம் கனடாவில் காலிஸ்தான் பிரிவினைவாத தலைவர் ஹர்தீப் சிங் நிஜ்ஜார் சுட்டுக் கொல்லப்பட்டார். இந்த கொலையில் இந்திய அரசுக்கு தொடர்பு இருப்பதாக கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ தொடர்ந்து குற்றம் சாட்டிவருகிறார். சுமார் ஓராண்டுக்கும் மேலாக மௌனமாக இருந்த அவர் தற்போது மீண்டும் அதே குற்றச்சாட்டை தீவிரமாக எழுப்பி வருகிறார்.

மேலும், நிஜ்ஜார் கொலையில் கனடாவுக்கான இந்திய தூதர் சஞ்சய் குமார் வர்மாவுக்கு தொடர்பு இருப்பதாகவும் பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ அண்மையில் குற்றம் சாட்டினார்.

இதைத் தொடர்ந்து சஞ்சய் குமார் வர்மா உட்பட 6 இந்திய தூதரக அதிகாரிகளை கனடா அரசு வெளியேற்றியது. இதற்கு பதிலடியாக இந்தியாவில் பணியாற்றி வந்த 6 கனடா தூதரக அதிகாரிகளை மத்திய அரசு வெளியேற்றியது.

இந்நிலையில், ஹர்தீப் சிங் நிஜ்ஜாரின் இறப்புச் சான்றிதழ் உள்ளிட்ட விவரங்களை கனடா அரசிடம் என்.ஐ.ஏ. அதிகாரிகள் கேட்டிருந்தனர். ஆனால் அந்தச் சான்றிதழ் உள்ளிட்ட விவரங்களை கனடா அரசு தர மறுத்துள்ளதாக என்.ஐ.ஏ. வட்டாரங்கள் தெரிவித்தன.




இதுகுறித்து என்.ஐ.ஏ. வட்டாரங்கள் கூறுகையில்,

“ஹர்தீப் சிங் நிஜ்ஜார் மீது பல்வேறு வழக்குகள் இந்தியாவில் உள்ளன. அவர் இறந்துவிட்ட நிலையில் அவர் மீதான வழக்குகளின் சட்டச் செயல்பாடுகளை முடிப்பதற்கு அவரின் இறப்புச் சான்றிதழ் தேவையாக உள் ளது. இதற்காக கனடா அரசை அணுகினோம். ஆனால் அவர்கள் இறப்புச் சான்றிதழை தர அவர்கள் மறுத்துள் ளனர்.

மேலும், ஹர்தீப் சிங் நிஜ்ஜாரின் இறப்புச் சான்றிதழ் உங்களுக்கு ஏன் தேவைப்படுகிறது என்று அவர்கள் பதில் கேள்வியும் எழுப்பி வருகின்றனர். “ - என்றனர்.



# கனடாவில் தீப்பிடித்து எரிந்த கார்; 4 இந்தியர்கள் பரிதாபமாக பலி!

கனடா - ரொறன்ரோவில் அருகே டிவைடரில் மோதிய எலக்ட்ரிக் கார் தீப்பிடித்து எரிந்ததில் காரில் பயணித்த 4 இந்தியர்கள் உடல் கருகி உயிரிழந்துள்ளனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியாவில் குஜராத்தை சேர்ந்த 30 வயதான கேட்டா கோஹில், 26 வயதான நில் கோஹில் ஆகியோர் மேலும் 2 நபர்களுடன் எலக்ட்ரிக் காரில் பயணம் செய்துள்ளனர்.

அப்போது டிவைடரில் கார் மோதியுள்ளது. அதனால், காரின் பேட்டரி தீப்பிடித்தது. இதனால் சம்பவ இடத்திலேயே 4 பேரும் உயிரிழந்தனர்.

இந்த விபத்தில் கடுமையான காயங்களுடன் உயிர் பிழைத்த 20 வயது மதிக்கத்தக்க பெண் ஒருவர் தற்போது மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

விபத்தில் சிக்கியவர்களுக்கு உதவுவதற்காக காரின் கண்ணாடிகளை உடைக்க சிலர் முயன்றனர் என இந்த சம்பவத்தை நேரில் பார்த்த ஒருவர் தெரிவித்துள்ளார்.



